கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம், தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைப்பெற்றது. வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். துரை.கி.சரவணன், அ.ஞானமுத்து உள்ளிட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரையில், தமிழ்நாடு முழுவதும் சுய உதவிக் குழுக்களுக்கு 2735 கோடி ரூபாய் வங்கி கடன் இணைப்புகள் வழங்கும் விழாவை துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரி கூட்டரங்கில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மகளிர் சுய உதவிக்குழுக்கான வங்கி கடன் இணைப்பை பயனாளிகளுக்கு வழங்கினார். சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்..மஸ்தான் , மாவட்ட ஆட்சியர் சி பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி , சட்டமன்ற உறுப்பினர்கள் விழுப்புரம் டாக்டர் இரா.இலட்சுமணன், விக்கிரவாண்டி அன்னியூர் அ.சிவா, மாவட்ட கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன்ஜெய் நாராயணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, ஒன்றிய குழு தலைவர்கள் கோலியனூர் சச்சிதானந்தம், திருவெண்ணெய்நல்லூர் ஓம் சிவ சக்திவேல், காணை கலைச்செல்வி, வளவனூர் பேரூராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி ஜீவா, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கு!

முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கா சென்றுள்ள முதல்வருக்கு பாராட்டு - வாழ்த்து!

மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமையில் நடைபெற்ற கழக சட்டத்துறை ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப்.10-

தலைமை கழக ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சட்ட துறையின் ஆய்வு கூட்டத்தில் கொடுக்க பட்ட ஆலோசனைகளை ஒட்டி நேற்று (09.09.2024) மாலை 6 மணியளவில் கழக சட்ட துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் நடைபெற்ற தலைமை கழக சட்ட துறை நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர்கள் கூட்டம் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் சட்டத் துறை இணை செயலாளர்கள் கே.எம். தண்டபாணி, ஈரோடு ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் கருத்துரை வழங்கினார். இணை செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன் தீர்மானங்களை வாசித்தார். துணை செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான் நன்றி கூறினார். இதில் துணை செயலாளர்கள் ஜே.பச்சையப்பன், கே.சந்துரு, தலைமை கழக வழக்கறிஞர்கள் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற சமூக நீதி ஆட்சி நடத்தி கொண்டிருக்கும் தளபதி அவர்கள் நல்லாட்சியில் தமிழ் நாடு என்றும்அமைதி பூங்காவாக இருக்கிறது என்பதற்கு எடுத்து காட்டாக பல ஆயிரம் கோடி முதலீடுகளை ஈர்த்து , பல லட்சம் இளைஞரகள் வேலை வாய்ப்புகளை பெற்றிடும் வகையில் , இந்திய ஒன்றியத்தில் தமிழ் நாட்டை தொழில் துறையில் முதன்மை மாநிலமாக மாற்றி ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலரை இலக்காக கொண்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்காவில் சுற்று பயணம் மேற்கொண்டு வெற்றி கரமாய் பல முதலீடுகளை ஈர்த்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தமிழகத்தின் தகை சால் தலைவர் தளபதி அவகளை இந்த கூட்டம் மனமார வாழ்த்தி பாராட்டுகிறது.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பாராட்டு!

முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்களின் நல்லாட்சியில்

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பெரு முயற்சியினால் அண்மையில் வெற்றி கரமாக நடை பெற்று முடிந்த தெற்காசியாவில் முதல் இரவு நேர போட்டியாக நடத்தப் பட்ட ஃபார்முலா 4 கார் பந்தயம் நடத்தி தன்னுடைய அயராத உழைப்பினால் வெற்றி கரமாக நடத்தி இனிவரும் காலம் இந்திய ஒன்றியத்தின் விளையாட்டு தலைநகரம் தமிழ் நாடு தான் என்று மீண்டும் ஒரு முறை நிரூபித்து காட்டிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பாராட்டி இந்த கூட்டம் தனது நெஞ்சம் நிறைந்த வாழ்தினை தெரிவித்து கொள்கின்றது/

அண்மையில் அசோக் நகர் அரசு பள்ளியில் வளர்ந்து வரும் அறிவியல் உலகத்தில் அறிவியலுக்கு சிறிதும் சம்பந்தம் இல்லாமல் யாராலும் ஏற்று கொள்ள முடியாத மூட நம்பிக்கை கருத்துக்களை தன் னம்பிக்கை பேச்சு என்ற பெயரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அறிவுக்கு ஒவ்வாத வகையில் இருந்ததால் முதலமைச்சர் தளபதி அவர்கள் அமெரிக்காவில் இருந்த படியே விரைந்து நடவடிக்கை எடுத்து மாண்புமிகு பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி அவர்களை அந்த பள்ளிக்கு அனுப்பி உண்மை நிலையை கண்டறிந்து நிகழ்ச்சி நடைபெற காரணமாக இருந்தவர்கள் அனைவர் மீதும் துறை ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் உடனடி நடவடிக்கை எடுத்து முட்டாள் தனமான, மூட நம்பிக்கை மற்றும் பிற்போக்கு சிந்தனை உள்ள கருத்துக்களை இனிவரும் காலங்களில் மாணவ செல்வங்களின் மனதில் யாரும் விதைக்க முடியாத அளவிற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து இந்த அரசு அறிவு பாதையில் மட்டுமே ஆட்சி செய்திடும் என்பதையும் அந்த பாதையே மாணவச் வாழ்க்கையில் உயர்திடும், அதன் வழியே மாநிலம் தழைத்திடும் என்று உணர்த்திய முதலமைச்சர் அவர்களுக்கு இந்த கூட்டம் தனது நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

துணை மேயர் காமராஜ் - மண்டலத் தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை - வே. கருணாநிதி பங்கேற்பு!

பல்லாவரம் தொகுதியில் 200 குடும்பங்களுக்கு புதிய குடும்ப அட்டைகள்!

இ.கருணாநிதி எம்.எல்.ஏ. வழங்கினார்!

பல்லாவரம், செப். 10

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் புதிய குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று (9.9.2024) குரோம்பேட்டையில் உள்ள தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் குரோம்பேட்டை அஸ்தினாபுரம் திருநீர்மலை பம்மல் அனகாபுத்தூர் பொழிச்சலூர் திரிசூலம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் புதிய குடும்ப அட்டைகள் வேண்டி விண்ணப்பித்திருந்தார்கள் அவர்களின் விவரங்கள் உணவுப் பொருள் வழங்கல் துறை மூலமாக ஆய்வு செய்யப்பட்டு பரங்கிமலை மண்டலம் மற்றும் தாம்பரம் மண்டல உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் துறை மூலம் புதிய குடும்ப அட்டைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு 200க்கும் மேற்பட்ட குடும்பத்தார்களுக்கு புதிய குடும்ப அட்டைகளை வழங்கி நமது முதலமைச்சர் அவர்கள் தகுதி உள்ள அனைவரும் புதிய குடும்ப அட்டைகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்ற அறிவித்த தற்கு இணங்க புதிய குடும்ப அட்டைகள் விண்ணப்பித்த அனைவருக்கும் அட்டைகளில் உள்ள விவரங்கள் சரியாக உள்ளதா என ஆய்வு செய்யப்பட்டு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர் துறை மூலமாக புதிய குடும்ப அட்டைகள் தயார் செய்யப்பட்டன.

அந்தக் குடும்ப அட்டைகளை பரங்கிமலை உதவி ஆணையர் மாலா தலைமையில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ், மண்டலத் தலைவர்கள் இ. ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள் த.ஜெயக்குமார், ஏ.கே.கருணாகரன் ஆகியோர் பங்கேற்றுள்ள இந்நிகழ்ச்சியில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

மேலும் இந்த குடும்ப அட்டைகளை பெற்ற மகளிர் உடனடியாக மகளிர் உரிமைத் தொகைக்கு விண்ணப்பிக்கலாம் என நமது முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆகையால் இந்த புதிய குடும்ப அட்டை பெற்ற தாய்மார்கள் கலைஞர் மகளிர் உரிமைத்தகைக்கு விண்ணப்பிக்க இது ஒரு இனிய தருணமாக அமைகிறது. மேலும் இந்த குடும்ப அட்டை பெற்ற குடும்பத்தாருக்கு தேவையான ரேஷன் பொருட்களை நாளை முதல் ரேஷன் கார்டில் சென்று பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து அனைவருக்கும் குடும்ப அட்டை வழங்குவதில் மகிழ்ச்சி கொள்கிறேன் என சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் காமராஜ், மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை. வே. கருணாநிதி, பகுதி கழகச் செயலாளர்கள் த.ஜெயக்குமார். ஏ. கே.கருணாகரன், மாமன்ற உறுப்பினர்கள் ரேணுகா தேவி, மங்கையர் திலகம், டி.வி ராஜா, பிரேம லதா சே. முத்துக்குமார், கலைச் செல்வி, கண்ணன், கீதா, புசிரா பானு, உணவு பொருள் வழங்கல் துறை அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் புதிய குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க புதிய குடும்ப அட்டைகளை நேற்று (9.9.2024) குரோம்பேட்டையில் உள்ள மண்டலம்2 அலுவலக வளாகத்தில் உதவி ஆணையாளர் தலைமையில் துணை மேயர் கோ. காமராஜ் , மண்டல தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை வே.கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் 200 க்கு மேற்பட்ட குடும்பத்தினருக்கு புதிய குடும்ப அட்டைகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி வழங்கினார்.. அப்பொழுது பகுதி கழக செயலாளர்கள் த.ஜெயக்குமார் , ஏ.கே.கருணாகரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் அறிவிப்பு!

சென்னை, செப். 10-

கழக தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆணைகிணங்க, இந்து சமய அறநிலையத்துறை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனையின்படி அம்பத்தூர் கிழக்கு பகுதியில் உள்ள ஆறு வட்டங்களிலும் கீழ்கண்ட அட்டவணைப்படி பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும் என பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ் அறிவித்துள்ளார்.

செப். 10 - செவ்வாய்க் கிழமை - மாலை 5.30 மணி - 82 'அ' வட்டம் - இடம்: ஸ்ரீவாரி மினி ஹால், கள்ளிக்குப்பம்,

மாலை 6.30 மணி - 82வது வட்டம், இடம்: ஹரிஹால், ஞானமூர்த்தி நகர்,

செப். 11 - புதன்கிழமை - மாலை 5.30 மணி - 83வது வட்டம் - கே.டி.எம். பார்ட்டி ஹால் சர்வீஸ் ரோடு, அக்ரஹாரம்,

மாலை 6.30 மணி - 84 அ வட்டம் - சமூக நலக் கூடம், பொன்னியம்மன் வளாகம், பட்டரவாக்கம்,

செப் . 12 - வியாழக் கிழமை - மாலை - 84 வது வட்டம் - ஸ்ரீஹரி பார்ட்டி ஹால்,

மாலை 6.30 மணி - 83 'அ' வட்டம் - மீனா மஹால், விவகானந்தா நகர்

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று ஆலோசனைகள் வழங்குகிறார்.

மேலும் இக்கூட்டத்தில் PTC செல்வ ராஜ் (மாநில தொழிற்சங்க தலைவர்) ஜோசப் சாமுவேல் MLA (வடக்கு பகுதி செய லாளர்) பி.கே.மூர்த்தி (செயற்குழு உறுப்பினர் 7வது மண்டலகுழு தலைவர்) கலந்து கொள்கிறார்கள்

அம்பத்தூர் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மற்றும் பொதுக் குழு உறுப்பினர் கள், வட்ட கழக செயலா ளர்கள், நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, BLC உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னாள் நிர்வாகிகள் கழக செயல் வீரர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

இ.கருணாநிதி எம்.எல்.ஏ எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு! ஏ.கே.கருணாகரன் தலைமை!

காஞ்சிபுரம், செப். 10

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (11.09.2024 புதன்கிழமை) மாலை 6 மணிக்கு, அஸ்தினாபுரம், பி.பி.ஆர். நலச்சங்க திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ. கே.கருணாகரன் தலைமை வகிக்கிறார்.

க.ரமேஷ், எ.வீரபத்திரன், கே.பூபதி, சரஸ்வதி சந்திரசேகர், டி.கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சி.ஆர்.மதுரைவீரன், ம.பற்குணன், ஓ.தண்டபாணி, ஜி.ஜெகநாதன், பி.பாலச்சந்தர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், அ.தமிழ்மாறன், என்.நவீன், மு.ரஞ்சன், மு.நாகலிங்கம், த.ராஜாராமன், கே.தனசேகரன், வே.தாமோதரன், எம்.ஐ.டி.எஸ்.விஜய், ஜெ.வேணுகோபால், என்.எஸ்.மதனகோபால், கோ.ஜானகிராமன், ஜெ.இன்சமாம், சி.ஆர்.எம்.மனோஜ்குமார், வி.ராஜேஷ், சி.ஆர். நரேஷ்குமார், எம்.இளவரசன், டி.டில்லிபாபு, ஜெ.ராகேஷ்சர்மா, ஆர்.பிரவின்குமார், வட்டக் கழகச் செயலாளர்கள் ம.நாகராஜ், ஏ.ரங்கநாதன், எம்.சார்லஸ், ஆர்.ராதாகிருஷ்ணன், ஜெ.சந்திரசேகர், எஸ்.மன்னா ராஜ கண்ணா, ந.கண்ணன் எம்.சி, சங்கீதா விஜய் எம்.சி, மகாலட்சுமி கருணாகரன் எம்.சி, சரண்யா மதுரை வீரன் எம்.சி. மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பகுதி துணைச் செயலாளர் எச்.பாஸ்கரன் நன்றி கூறுகிறார்.

கே.அங்குசாமி ஏற்பாட்டில் புழல் எம். நாராயணன் முன்னிலையில்

மாதவரம் வடக்கு பகுதி 15வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்!

மாதவரம்,செப்.10-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி 15 ஆவது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் மணலி புதுநகர் எம். வி.ஆர் அரங்கத்தில் நடைபெற்றது.

15--வது வட்டச் செயலாளர் கே. அங்குசாமி வரவேற்புரையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து கழகத்தினருக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், கவுன்சிலர் நந்தினி சண்முகம், பொதுக் குழு உறுப்பினர் என். பரந்தாமன், பகுதி கழக நிர்வாகிகள் கே. செல்வன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபால கிருஷ்ணன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஏ. முகமது வசீம், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் கோ. தங்கராஜ்,மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் இ. எம். மனோகரன்,

15 ஆவது வட்டக் கழக நிர்வாகிகள் கே. ஜி கண்ணன், இ. ராஜேந்திரன்,பி. டி. ரவிச்சந்திரன், ஏ. பக்தவச்சலம், எம். தேவயானை, எஸ். மனோகரன், எல்லமுத்து, டி .எஸ். பாலாஜி, ஆர். பாஸ்கர், வக்கீல் டில்லி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் விஜயன், வக்கீல் சண்முகம்

பாக முகவர்கள் தசரதன், உதயகுமார், தேவராஜ், முருகன், தனசேகரன், ராஜேந்திரன், கண்ணன், செல்வன், விஜயன், பைஜிமோன், பாலாஜி, எல்லமுத்து, தங்கராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன்,வட்டச் செயலாளர் கே. அங்குசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்ட 200க்கும் மேற்பட்ட தாய்மார்களுக்கு சேலைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஓட்டுனர்களுக்கு சீருடைகள் ஆகியவை வட்டச்செயலாளர் கே. அங்குசாமி ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் மற்றும் பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் மற்றும் நிர்வாகிகள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் ஆணைப்படி, முப்பெரும் விழாவை சிறப்பாக நடத்துவது எனவும், வீடுகள் தோறும் கழக கொடி ஏற்றி கழக பவள விழாவை கொண்டாடுவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்திற்கான ஏற்பாட்டை 15 வது வட்டச் செயலாளர் கே .அங்குசாமி செய்திருந்தார்.

மாதவரம் வடக்கு பகுதி 15 ஆவது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் கே. அங்குசாமி ஏற்பாட்டில் மணலி புதுநகரில் நடைபெற்றது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ் . சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கி கழக முன்னோடிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கியபோது எடுத்த படம். உடன் அறிவழகி பாலகிருஷ்ணன் என் பரந்தாமன் நந்தினி சண்முகம் கே. செல்வன் எஸ் கோபாலகிருஷ்ணன் ஏ முகமது வசீம் கோ தங்கராஜ் இ எம் மனோகரன் கண்ணன் ராஜேந்திரன் ரவிச்சந்திரன் பக்தவச்சலம் தேவயானை மனோகரன் எல்லமுத்து பாலாஜி பாஸ்கர் வக்கீல் டில்லி விஜயன் சண்முகம் மற்றும் வட்டக் கழக பகுதி கழக நிர்வாகிகள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உடன் உள்ளனர்.